[8th November 1966

அடிப்படைச் சம்பளம் ரூ. 200-ஆக இருக்கிறது. ஆகவே, இதை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் லெவலுக்கு உயர்த்துவது பற்றிக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தற்பொழுது அம்மாதிரி ஒன்றும் உத்தேசம் இல்லை.

குளச்சல் துறைமுகம்

* 493 கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எந்தெந்த துறைமுகங்களில் உணவு இறக்குமதி செய்யப்படுகிறது ?

(இ) குளச்சல் துறைமுகத்தையும் உணவு இறக்குமதிக்குப் பயன்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

(உ) ஆம் எனில், அதை விரிவுபடுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (a) So far as Minor Ports are concerned, foodgrains are imported at Tuticorin port only.

(b) & (c) Import of foodgrains through Colachel Port could be considered only after the development works proposed for the port during the Fourth Plan period are completed.

பலதார மணத்தடை

* 494 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) முஸ்லீம் மதத்தினரின் பலதார மணத்தடைச் சட்டம் செய்ய மத்திய அரசு, மாநில அரசுக்கு இந்த ஆண்டில் கருத்துக்கள் ஏதேனும் கேட்டிருந்தார்களா ?

(இ) ஆம் எனில், அதைப்பற்றி அரசு தெரிவித்த கருத்து என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) இது குறித்துப் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இது குறித்து மத்திய அரசு கேட்டிருந்த தகவல்களுக்கு இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The Commissioner of Police, Government Pleader, Registrar, High Court and Secretary, Bar Council, have been addressed and their replies are awaited.

3th November 1966]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த யோசனையும், இந்த யோசனையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற சட்டமும் ஒரு தனிப்பட்ட மதத்தினரை, அதாவது முஸ்லீம் மதத்தினரைப் பாதிப்பதாக இருக்கிற காரணத்தினால், முஸ்லீம் பிரமுகர்களை நமது அரசாங்கம் யோசனை கேட்டதா? அப்படிக் கேட்காமல் ஹைகோர்டு, கவர்ன்மெண்டு ப்ளீடர், பார் கவுன்சில் முதலியோர்களை யோசனை கேட்பதில் என்ன பிரயோசனம்? இது ஒரு குறிப்பிட்ட மதத்தினருடைய சுதந்திரத்தைப் பறிப்பதன் காரணமாக முஸ்லீம் பிரமுகர்களை அரசாங்கம் யோசனை கேட்டதா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Among the Muslims also, opinion is divided on this point. Many of them are not in favour of abolition.

கனம் சபாநாயகர் : முஸ்லீம் பிரமுகர்களை அரசாங்கம் யோசனை கேட்டதா என்று தான் அங்கத்தினர் கேட்கிறார்கள். மற்ற விவரத்தை அடுத்த கேள்வி கேட்கும்போது கொடுக்கலாமே ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கேட்டது.

சேமநிதி

* 501 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :
திரு. ஆ. தங்கவேலு : } கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) யுத்தகால கட்டாய சேமிப்பு நிதியாக சர்க்கார் சிப்பந்திகளிடம் வசூலான தொகை எவ்வளவு?

(இ) அத்தொகையைத் திரும்பக் கொடுத்துவிடும்படி சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்களா ?

(உ) அத்தொகை முழுமையும் திரும்பக் கொடுக்கப்பட்டு விட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) The total amount collected as compulsory deductions from the Government servants towards emergency fund is estimated at Rs. 3.42 crores.

(b) The Government have ordered the amounts to be merged with normal Provident Fund accumulations of the Government servants concerned.

(c) Does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அந்தப் பணத்தை பிராவிடெண்டு பண்டோடு சேர்த்துக்கொள்வதற்கு அவர்களுடைய சம்மதம் பெறப்பட்டதா? அவர்களுடைய திருப்தியுடன் இது நடந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தப் பணம் பிராவிடெண்டு பண்டோடு சேர்ந்திருக்கிறது. அது அவர்களுடைய பிராவிடெண்டு பண்டு. அதை மெர்ஜ் பண்ணுவதற்கு அவர்களுடைய